பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

05 09 2024 **THURSDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய நல்லாசிரியர் விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்கினார்.
2. சூரியசக்தி மின்சார பயன்பாடு கடந்த பத்தாண்டுகளில் 32 மடங்கு அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
3. தமிழகத்தில் இரண்டாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் முதலீடு செய்வதற்கான ஒப்பந்தத்தில் **Trilliant** நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது.
4. வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. பாரிஸ் பாராலிம்பிக் போட்டியின் மகளிர் 100 மீட்டர் ஓட்டப்பிரிவில் இந்தியாவின் சிம்ரன் ஷர்மா இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**<<<<<>>>>**

மகளிரின் கண்ணியத்தை காக்கும் வகையில் அனைவரும் செயல்படுவதற்கு ஏதுவாக ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.
ஆசிரியர் தினத்தையொட்டி, இன்று புதுதில்லியில் தேசிய நல்லாசிரியர் விருதுகளை வழங்கி அவர் பேசினார்.
புதிய கல்விக்கொள்கையில் திறன் மேம்பாட்டிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.
ஒரு குழந்தையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இது உதவிடும் என்றும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.
இந்த நிகழ்ச்சியில், 82 பேருக்கு தேசிய நல்லாசிரியர் விருதுகளை குடியரசுத் தலைவர் வழங்கினார்.
மதுரையை சேர்ந்த திரு முரளிதரனும், வேலூர் மாவட்டத்தை சேர்ந்த திரு கோபிநாத்தும் இந்த விருதினை குடியரசுத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

<u>*(சவுண்ட் பைட் - விருது – 20 செகண்ட்ஸ்)*</u>

உயர்கல்வித்துறையில் தமிழகத்தை சேர்ந்த டாக்டர் காந்திமதியும், டாக்டர் பிருந்தாவும் இவ்விருதினை பெற்றுக்கொண்டனர்.

<u>*(சவுண்ட் பைட் - விருது – 20 செகண்ட்ஸ்)*</u>

**<<<<<>>>>**

சூரியசக்தி மின்சார பயன்பாடு கடந்த பத்தாண்டுகளில் 32 மடங்கு அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
புதுதில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச சூரியசக்தி திருவிழாவில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றினார்.
பசுமை எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.
சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தின் உறுதிமொழிகளை பூர்த்தி செய்வதில் இந்தியா முன்னிலையில் உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

**<<<<<>>>>**

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிங்கப்பூரில் திருவள்ளுவர் கலாச்சார மையம் ஏற்படுத்தப்படும் என்று பிரதமர் அறிவித்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

<u>*(சவுண்ட் பைட் - நிர்மலா – 47 செகண்ட்ஸ்)*</u>

**<<<<<>>>>**

ஐந்து-ஜி சேவைகளை வழங்குவதில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் அஞ்சல்துறை அதிகாரிகள் பங்கேற்ற மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

அஞ்சல்துறை இல்லாமல் எந்தவொரு நாட்டின் வரலாறும் இருக்க முடியாது என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>

தமிழகத்தில் இரண்டாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் முதலீடு செய்வதற்கான ஒப்பந்தத்தில் **Trilliant** நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது.

அரசுமுறைப்பயணமாக அமெரிக்கா சென்றுள்ள முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதனைத்தொடர்ந்து, **Nike** மற்றும் **United Health Care** நிறுவனத்தின் நிர்வாகிகளுடன் முதலமைச்சர் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த ஆலோசனையின்போது, தமிழகத்தில் முதலீடு செய்ய முன்வருமாறு திரு மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்தார்.

<<<<<>>>>

தமிழகத்தில் 141 கோடி ரூபாய் செலவில் கிராம சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு கூறியுள்ளார்.

இன்று மதுரையில் மேம்பாலப்பணிகளை ஆய்வு செய்தபின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - எ வ வேலு – 40 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

தமிழகத்தில் காலியாக உள்ள மருத்துவப் பணியிடங்களை திமுக அரசு உடனடியாக நிரப்ப வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் 31 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவப்பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

திமுக அரசு பொறுப்பேற்றபின்னர் காலியாக உள்ள மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவப்பணியாளர் பணியிடங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>

வங்கக்கடலில் இன்று குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 51 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

## மாவட்டச் செய்திகள்

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் ஊட்டச்சத்து விழிப்புணர்வு பேரணியை மாநில அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் இன்று தொடங்கிவைத்தார்.

------------------

பெரம்பலூர் மாவட்டத்தில், மகளிருக்கான திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தின் சேவையை ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

திருவாரூர் மாவட்டம் குறும்பல் ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள பால் கொள்முதல் நிலையத்தை ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ இன்று திறந்துவைத்தார்.

----------------

கன்னியாகுமரி மாவட்டம் விழவூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

----------------

வ உ சிதம்பரனார் பிறந்த தினத்தை முன்னிட்டு, தூத்துக்குடி துறைமுகத்தை பொதுமக்கள் இலவசமாக பார்வையிட இன்று அனுமதிக்கப்பட்டனர்.

<<<<<>>>>

விளையாட்டுச் செய்திகள்

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியின் மகளிர் 100 மீட்டர் ஓட்டப்பிரிவில் சிம்ரன் ஷர்மா இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இதற்கான தகுதிச்சுற்றில் அவர் இரண்டாவது இடத்தை பிடித்தார்.

வில்வித்தை போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் **Harvindar Singh - Pooja Jatyan** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 5-4 என்ற புள்ளிக்கணக்கில் ஆஸ்திரேலிய இணையை வென்றது.

இப்போட்டியில், இந்தியா இதுவரை 5 தங்கம், 9 வெள்ளி, 10 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 13-ஆவது இடத்தில் உள்ளது.

----------------

உலக காதுகேளாதோருக்கான துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஜெர்மனியின் **Hanover**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 50 மீட்டர் பிரிவில் **Mahit Sandhu** தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 25 மீட்டர் பிரிவில் **Abhinav Deshwal** வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 4 தங்கம், 7 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

------------------

ஷாங்காய் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Arjun Kadhe - Rithvik Choudary** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<END>>>>>**